

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் மகள் அகஸ்டி மேரீஸ் பிரியங்கா – ஆன்றோ அஷின் இணையரின் திருமண வரவேற்பு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவாகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் திருமதி கீதா ஜீவன், மனோ தங்கராஜ், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர் உள்ளனர்.

## கழக மாநில மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் மகள்

# அகஸ்டி மேரீஸ் பிரியங்கா - ஆன்றோ அஷின் திருமண விழா!

### நாகர்கோவிலில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!




**நாகர்கோவில்,மே.03-**

**கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் மகள் அகஸ்டி மேரீஸ் பிரியங்கா - ஆன்றோ அஷின் இணையரின் திருமண வரவேற்பு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்தினார்.**

**அப்போது அவர் மணமக்கள் வாழ்வில், எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திப் பேசினார்.**

**அவர் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

முதலமைச்சர் சார்பாகவும், இளைஞர் அணியின் சார்பாகவும் இன்றைக்கு நம் கழகத்தின் மீனவர் அணிச் செயலாளர் அண்ணன் ஜோசப் சாமுவேல் அவர்களின் இல்லத் திருமண விழா, நம் அனைவரின் வாழ்த்துகளோடு சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. மீனவர் அணியின் செயலாளரை, இளைஞர் அணியின் சார்பாக வாழ்த்த வந்து இருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அடிக்கடி சொல்வார். இயக்கத்தில் இளைஞர் அணிதான் முதன்மையான அணி என்று சொல்வார்.

**சிறப்பான திட்டங்கள்**

இளைஞர் அணி எப்படி மிக மிக முக்கியமான அணியோ, அதேபோல் மீனவர் அணியும் கழகத்தின் மிக மிக முக்கியமான அணி. அந்த அணியின் செயலாளர் அண்ணன் ஜோசப் ஸ்டாலின் அவர்கள் மிகச் சிறப்பாக அந்த அணியின் பணிகளை எல்லாம் செய்யக் கூடியவர். இங்கு நிறைய மீனவ மக்கள் மற்றும் மகளிர் வந்து இருக்கிறீர்கள். மீனவர்களுக்கும், மகளிருக்கும் நம் கழக அரசு, கடந்த நான்கு ஆண்டுகளில் எவ்வளவு சிறப்பாக திட்டங்களை கொண்டு வந்து இருக்கிறது என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இன்னும் 4 நாட்களில் நான்காவது ஆண்டை நிறைவு செய்து, ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

**அரசின் சாதனைகள்**

இன்னும் ஒரு வருடத்தில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை நாம் எதிர்நோக்கி இருக்கிறோம். 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகள் நாம் வெற்றி பெற்றாக வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். அந்த இலக்கை நாம் அடைய வேண்டும் என்றால், இந்த மாவட்டத்தில் இருக்கின்ற 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்றால், நாம் அனைவரும், அடுத்த ஒரு வருடம் நம் அரசின் சாதனைகளை எல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த திருமண விழாவில் உங்கள் அனைவரின் சார்பாகவும் வாழ்த்தும் வேளையில், மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். உங்களுக்கு பிறக்கப்போகின்ற குழந்தை ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அழகான தமிழ்ப் பெயரை வையுங்கள் என்று உங்கள் அனைவரின் சார்பாக வேண்டுகோள் வைத்து, மீண்டும் மணமக்களை வாழ்க, வாழ்க என வாழ்த்தி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் கீதாஜீவன், மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகர மேயரும், கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளருமான மகேஷ், நெல்லை மத்திய மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் வஹாப், தமிழ்நாடு உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜா, மாநில மீனவர் அணித் துணைத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர், கழக மகளிர் அணி மாநிலச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞான திரவியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜன், புஷ்பலீலா ஆல்பன், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் சிவராஜ், தில்லைச்செல்வம், ஜோசப் ராஜா,பாபு வின்பிரெட், மாநகரச் செயலாளர் ஆனந்த், அகஸ்டீஸ்வரம் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

## 2 பல்கலைக் கழகங்களுக்கு

# துணை வேந்தர்களைத் தேர்வு செய்ய குழு!

### தமிழ்நாடு அரசு அமைத்தது!

**சென்னை, மே 3 -**

**தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகங்களுக்கான துணை வேந்தர்களைத் தேர்வு செய்யும் குழுவை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.**

தமிழ்நாடு அரசு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில்,

தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தரை தேர்ந்தெடுக்க, தேடுதல் குழு நியமிக்கப்பட்டுள்ள தாகவும், இந்தக் குழுவில், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி அருணா ஜெகதீசன், முன்னாள் துணைவேந்தர்கள் சச்சி தானந்தம், விஜயகுமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டு ள்ளது.

இதேபோல், தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள மற்றொரு செய்தியில், தஞ்சாவூரில் உள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தரை நியமனம்செய்ய ஐவர் கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இக்குழுவில், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.பி.கே.வாசுகி, முன்னாள் முதன்மைச் செயலாளர் கே.தீனபந்து, ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் மு.செல்வம், பெரியார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தவர் முனைவர் மு.தங்கராசு, காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ச.இராசேந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.



சென்னை திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்போட்டையில் உலக தொழிலாளர் வேலையிட பாதுகாப்பு மற்றும் உடல்நல தினத்தை முன்னிட்டு சிம்ஸ் மருத்துவமனை சார்பில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமினை சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். உடன் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, டைமா தலைவர் ஜி.ரமேஷ்கண்ணா, சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கார்த்தி, சிம்ஸ் மருத்துவனையின் துணைத் தலைவர் ராஜ் சிவசாமி, டாக்டர் பாலாஜி, டைமா துணைதலைவர் ஆர்.செல்வம் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.




# மேதின விழா: முதல்வர் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

அதில் உள்ளே அமைந்திருக்கக்கூடிய நாங்கள் எல்லாம் சென்று மலர் வளையம் வைத்து, எங்கள் அஞ்சலியை, எங்கள் மரியாதையை, வணக்கத்தைச் செலுத்திவிட்டு வந்திருக்கிறோமே – அந்த நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தித் தந்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள் தான் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச் சொல்லி, இன்றைக்கு தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் மூலமாக இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் எத்தனையோ திட்டங்களை, எத்தனையோ சாதனைகளை தேர்தல் நேரத்தில் அறிவித்திருக்கக்கூடிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில், அதிலும் குறிப்பாக தொழிலாளர்களுக்காகச் செய்திருக்கக் கூடிய சாதனைகள் ஒன்றிரண்டை நான் உங்களிடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால்;

- **கடந்த நான்காண்டு காலத்தில் 28 இலட்சத்து 87 ஆயிரத்து 382 அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரத்து 461 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறோம்.**
- **உணவு மற்றும் பிற பொருள்களை டெலிவரி செய்யும் GIG (கிக்) தொழிலாளர்களுக்கும், தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்களுக்கும் தனி நல வாரியத்தை அமைத்திருக்கிறோம்.**
- **பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் உயிரிழந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி, அதையும் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கிறோம்.**
- **20 அமைப்புசாராத் தொழிலாளர் வாரியங்களில், 2021-24 காலக்கட்டத்தில் 16 இலட்சம் ஊழியர்கள் புதிதாகப் பதிவு செய்திருக்கிறார்கள்.**
- **கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அமரும் உரிமையைக் கட்டாயமாக்கி அரசாணை வெளியிட்டிருக்கிறோம்.**

**கார்ல் மார்க்சுக்கு சென்னையில் சிலை!**

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, உலக மாமேதை பொதுவுடைமைத் தத்துவத்தை அளித்த பிதாமகன், கார்ல் மார்க்ஸ் அவர்களுடைய சிலையை சென்னையில் அமைப்போம் என்று நாம் சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறோம். அதுவும் விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இதன் மூலமாக, தொழிலாளர்களும் வளர்ந்து வருகிறார்கள். தொழில் வளர்ச்சிக்கு இலக்கு வைத்திருப்பது மாதிரியே தொழிலாளர் வளர்ச்சிக்கும் இலக்கு வைத்து இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்த முதலீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தாலும், எந்த MoU ஒப்பந்தம் கையெழுத்திட்டாலும், அப்போது நான் முதன்முதலாக கேட்பது என்னவென்றால், எவ்வளவு பேருக்கு வேலை தருவீர்கள் என்றுதான் முதல் கேள்வியைக் கேட்பதுண்டு.

வேலை தருபவர் - பணியாளர் ஆகியோர் இடையிலான உறவை சமரசத்தின் மூலமாக நாம் சமப்படுத்தவேண்டும், பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலமாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். அப்படித்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**என்றைக்கும் தொழிலாளர்கள் பக்கம் நிற்கும் அரசு இது!**

இது சாமானிய மக்களுக்காக, சாமானியர்களின் ஆட்சி என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம். என்றைக்கும் உங்கள் கூட - உங்களுக்காக நிற்கும், உங்களில் ஒருவன்தான் நானும், நம்முடைய அரசும்.

இந்த நாடே சமத்துவபுரமாக மாற வேண்டும் என்பதை எங்களின் இலட்சியம், கொள்கையாக வைத்து இலக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்! இதை மனதில் வைத்துதான் அரசு பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது.

இன்னும் ஒரு வார காலத்தில், திராவிட மாடல் ஆட்சி உருவாகி, நான்காவது ஆண்டை நிறைவு செய்து, 5-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறோம். எனவே, மே தினம் கொண்டாடக் கூடிய இங்கே இருக்கக்கூடிய தொழிலாளத் தோழர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்காக உழைக்கின்ற, பாடுபடுகின்ற இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் உறுதுணையாக இருந்து இந்த ஆட்சிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் - பக்கபலமாக இருக்க வேண்டும் என்று அந்த உறுதியை இந்த நல்ல நாளில் எடுத்துக் கொள்வோம் என்று கேட்டு, மீண்டும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய மே தின வாழ்த்துகளைத் தெரிவித்து நான் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.



திருவள்ளூர் தொகுதி பூண்டி மேற்கு ஒன்றியம் பூண்டி ஊராட்சி கிராம சபை கூட்டம் நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை. ஜெயக்குமார், உதவி இயக்குனர் ஊராட்சிகள் யுவராஜ், கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், உதவி திட்ட அலுவலர் மணிவாசகம், பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வரதராஜன், சுலோச்சனா, வட்டாட்சியர் ரஜினிகாந்த், துணை வட்டாட்சியர் தினேஷ், பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா. மோதிலால், வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, வழக்கறிஞர் வி. எஸ். சதீஷ், பூண்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சித்ரா ரமேஷ், பூண்டி கோபி, தோமூர் கௌதம், அன்பு உள்ளிட்ட கழகத் தோழர்கள் மற்றும் ஏராளமான கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.